**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 47/2020 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW - 13 |
| | Defence |
| | Court |
| Name | வெற்றிசெல்வன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 27th day of February 2026.

Signature of Witness

Name of the Interpreter: Tmt. Eswari, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 27th day of February 2026.

Signature of Interpreter

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது வாலாஜாபாத் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.11.2019 அன்று 12.00 மணிக்கு பாலுசெட்டி சத்திரம் காவல் நிலைய ஆய்வாளராக இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் திரு.இந்திரன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது சண்முகம், வயது 32 என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரில் நிலைய குற்ற எண். 491/2019 பிரிவு 294பி, 307, 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்ததனை நான் பார்வையிட்டு சம்பவம் இடம் சென்று 13.00 மணிக்கு அருகில் இருந்த சாட்சிகள் முருகன், பழனி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகும். பிறகு அங்கு இருந்த சாட்சிகளான சண்முகம், சசிகலா, மாதவன், சங்கீதா, முருகன் மற்றும் பழனி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்மூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகளின் அடிப்படையில் எனது ரகசிய விசாரணையும் சம்பவம் உண்மை என்று தெரிந்து எதிரி மணிகண்டன் என்பவரை அதே நாளில் 15.00 மணிக்கு பொன்னியம்மன் பட்டறை எதிரி மணிகண்டன் என்பரின் நிலத்தின் அருகே சாட்சிகள் அடையாளம் காட்ட 15.15 மணிக்கு கைது செய்து சாட்சிகள் அண்ணாதுரை, திருப்பதி ஆகியோர் முன்னிலையில் எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அதன் அடிப்படையில் எதிரி சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்பு கத்தி ஒன்று, TN 21 AC 3850 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Passion Pro என்பதை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.6 ஆகும். அந்த

கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 ஆகும். இரும்பு கத்தி சா.பொ.1 ஆகும். TN 21 AC 3850 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Passion Pro சா.பொ.2 ஆகும் எதிரி மற்றும தடய சொத்துகளுடன் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு எதிரியை அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்துகளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். அந்த படிவம் 91 அ.சா.ஆ.8 ஆகும். மேலும் அ.சா.2 ராஜேந்திரனை 17.11.2019 அன்று சென்னை மியாட் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கில் காயம் பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் நரேந்திகுமார் என்பரரை சந்தித்து காயம்பட்ட நபருக்கு காயச்சான்று பெற்றேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று பெற்றும் வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.04.2020 அன்று இவ்வழக்கில் எனது அனைத்து விசாரணையின் முடிவில் எதிரி மணிகண்டன் மீது பிரிவு 294பி, 307, 506(ii) இதசவின் பிரிவை 294பி, 307 மற்றும் 341 இதசவின் கீழ் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும். எனது விசாரணையை முடித்து எதிரி மணிகண்டன் மீது 294பி, 307 மற்றும் 341 இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

## <u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.8 அண்ணாதுரை மற்றும் அ.சா.9 திருப்பதி அ.சா.1 சண்முகத்தின் மாமன் மற்றும் மைத்துனர் என்ற விவரம் என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை. அ.சா.2 ராஜேந்திரன் சா.பொ.1 மற்றும் 2 பொருட்களை என்னுடைய விசாரணையில் போது அடையாளம் படுத்தவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரை யார் தட்டச்சு செய்தார்கள் என்ற குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதனை

புகார்தாரரே தட்டச்சு செய்து கொண்டு வந்த காரணத்தினால் அதனை விசாரணை செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை. ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் பார்வை மகஜரில் உள்ள சாட்சிகள் காவல் நிலைய கையிருப்பு சாட்சிகள் என்றும் அதனால் தான் அவர்களுடைய கையொப்பத்தினை மறுத்துள்ளனர் என்றால் தவறாகும். எதிரி மீது பொய்யான புகாரின் அடிப்படையில் நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் அவர் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விவதத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்